DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, DHARAPURAM

SESSIONS CASE NO: 99/18 Deposition of Witness for : P.W. 5

| | | | |
|---|---|---|---|
| Name : | விஜயகுமார் | Caste : | |
| Father's Name : | பெரியசாமி | Calling : | |
| Age : | | Taluk : | |
| Village : | | District : | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 05.10.2021.

முதல் விசாரணை

சத்தியமாக சொல்கிறேன். நான் தற்போது திருப்பூர் மாநகர நடமாடும் தடய அறிவியல் ஆய்வகத்தில் உதவி இயக்குனராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 5.11.2013 அன்று அறிவியல் அலுவலராக பணியில் இருந்தபோது நீதித்துறை நடுவர் காங்கேயம் அவர்களின் கடிதஎண். 2445/2013 நாள் 5.11.2013 என்று குறிப்பிட பட்ட கடிதத்துடன் தலா 375 மிலி பிடிக்கக்கூடிய 12 கண்ணாடி பாட்டில்களில் குறியீடு செய்யப்பட்டு தலா 350 மிலி நிறமற்ற திரவம் ஆய்விற்காக என்னால் பெறப்பட்டது. அதனை நான் ஆய்வு செய்ததில் S1, S2, S3 மற்றும் S4 என்று குறியிடப்பட்ட பாட்டில்களில் உள்ள திரவத்தில் தலா 89.26% ஈத்தையல் ஆல்காஹல் இருந்தது கண்டறியப்பட்டது. அதனுடன் அமிலங்கள் எஸ்டர்கள் மற்றும் ஆல்டிகைடுகள் இருந்தன. அவைகள் சுத்திகரிக்கப்பட்ட எரிசாராயம் தரம்குறைந்தவை ஆகும். அவற்றில் தலா 7.23 மிலி கிராம் / 100 மிலி அட்ரோபின் இருந்தது கண்டறிப்பட்டது.

மேலும் S5 S6 S7 மற்றும் S8 என்று குறியிடப்பட்ட பாட்டில்களில் உள்ள திரவத்தில் தலா 89.03% ஈத்தையல் ஆல்காஹல் இருந்தது கண்டறிப்பட்டது. அதனுடன் அமிலங்கள் எஸ்டர்கள் மற்றும் ஆல்டிகைடுகள் இருந்தன. இவைகள் சுத்திகரிக்கப்பட்ட எரிசாராயம் தரம்குறைந்தவை ஆகும். அதனுடன் 6.65 மிலி /100 மிலி அட்ரோபின் இருந்தது கண்டறிப்பட்டது. மேலும் T1 T2 T3 மற்றும் T4 என்ற குறியிடப்பட்ட பாட்டில்களில் உள்ள திரவத்தில் தலா 88.53% ஈத்தையல் ஆல்காஹல் இருந்தது கண்டறிப்பட்டது. அதனுடன் அமிலங்கள் எஸ்டர்கள் மற்றும் ஆல்டிகைடுகள் இருந்தன. மேலும் இவற்றில் 6.07 மிலி/100 மிலி அட்ரோபின் இருந்தது கண்டறிப்பட்டது. அட்ரோபின் ஒரு நச்சு தன்மை வாய்ந்த் ஆல்கலாய்டு ஆகும். 7.11.2013 தேதியிட்ட கோவை வட்டார தடய அறிவியல் ஆய்வக அறிக்கை RT No.7104/2013 (S1, S2, S3 மற்றும் S4) அறிக்கை அசாஆ.18. 7.11.2013 தேதியிட்ட கோவை வட்டார தடய அறிவியல் ஆய்வக அறிக்கை RT No.7104/2013 (S5, S6, S7 மற்றும் S8) அறிக்கை அசாஆ.19. 7.11.2013 தேதியிட்ட கோவை வட்டார தடய அறிவியல் ஆய்வக அறிக்கை RT No.7104/2013 (T1 T2 T3 மற்றும் T4) அறிக்கை அசாஆ.20. இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை ( எதிரிகள் 2 , 6 முதல் 9 வரை தரப்பில் )

நான் இந்த வழக்கில் 3 அறிக்கைகள் மட்டும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் மொத்தம் எனது தரப்பில் 8 அறிக்கைகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். காங்கேயம் மதுவிலக்கு பிரிவு குற்றஎண்.717/2013 சம்பந்தபட்ட வழக்கில் 5.11.2013 தேதியிட்டு காங்கேயம் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்கள் அளித்த

கடிதத்தின் படி S1 முதல் S8, T1 முதல் T4 என்று குறிப்பிடப்பட்டுள்ள கடிதத்தில் கண்டுள்ள சொத்துக்களை நான் ஆய்வு செய்து அசாஆ.18 முதல் 20 வரை கொடுத்துள்ளேன். அந்த அறிக்கையில் அசாஆ.19, அசாஆ.20 ல் தேதி 9.10.2012 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தேதி தவறுதலாக அச்சிடப்பட்டுள்ளது. சொத்துகளை ஆய்வு செய்து நான் கைப்பட எழுதிய அறிக்கையை ஒப்படைக்கமுடியுமா என்றால் முடியும். அந்த அறிக்கையை நான் நீதிமன்றத்திற்கு கொண்டு வந்துள்ளேன். நான் ஆய்வு செய்த அறிக்கை ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான் அவைதான் அசாஆ.18 முதல் அசாஆ.20 வரை உள்ளவை. குறியீடு செய்யப்பட்ட அறிக்கைகள் தவிர 5 அறிக்கைகள் வழக்கு கோப்பில் உள்ளது என்றால் சரிதான். A1 to B4 க்கு உண்டான பாட்டில்களின் ஆய்வறிக்கையில் விசத்தன்மை இல்லை என்றும், தரம் குறைந்த எரிசாராயம் என்றும் குறிப்பிட்டுள்ளேன். அதே போல் C1 to C6, D1 to D4 , E1, E2, F1, F2, G1 to G4 ஆகியவற்றிலும் விசத்தன்மை இல்லை என்று குறிப்பிட்டுள்ளேன். சாதாரண சாராயத்திலும் அமிலம் கலந்திருக்கும் என்றால் சரிதான். சாதாரண அமிலத்தை மருத்துவத்துறைகளில் பயன்படுத்துவார்கள். என்னிடம் காட்டப்படுவது காவல்துறையில் நான் கொடுத்த வாக்குமூலம் என்றால் சரிதான். அந்த வாக்குமூலத்தில் S1 to S4 பாட்டில்களை மட்டும் ஆய்வு செய்து அறிக்கை கொடுத்துள்ளேன் என்றால் காவல்ஆய்வாளர் வாக்குமூலத்தில் அவ்வாறு எழுதியுள்ளார். ஆனால் எல்லா பாட்டில்களையும் ஆய்வு செய்து அறிக்கை கொடுத்துள்ளேன். போலீசாரிடம் நான் கொடுத்த வாக்குமூலத்தை படித்து பார்த்தேனா என்பது எனக்கு நினைவில்லை. நான் அறிக்கை கொடுத்த ஒரு சில நாட்களில் போலீசார் என்னை விசாரித்தார்கள். வாக்குமூலத்தில்

தேதி 27.9.2016 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு பரிசோதனை செய்ய வழங்கப்பட்டது கண்ணாடி பாட்டில்கள் ஆகும். போலீசார் நீதிமன்றத்திலிருந்து கொடுக்கப்பட்ட கடிதத்தின் படி பரிசோதனைக்காக என்னிடம் ஆய்வகத்திற்கு கொண்டு வரப்பட்டது. எரிசாராயம் என்பது ஸ்பிரிட் ஆகும். போலீசார் கைப்பற்றிய நாளிலிருந்து எத்தனை நாட்களுக்குள் ஆய்விற்கு கொண்டுவரப்பட்டது என்றால் வழக்கு விவரங்களை பார்த்து சொல்லமுடியும். எல்லாவகை சாராயமும் நொதிக்கும் தன்மை உடையது என்றால் சரிதான். சாராயமானது நாட்கள் செல்லச் செல்ல அடைத்து வைக்கப்பட்டிருந்தால் அவை சிறிதளவு நொதிக்கும் தன்மையுடையதாக மாற்றம் ஏற்படும். போலீசார் முதல் தகவல் அறிக்கையில் சொல்வது போல நான் ஆய்வு செய்த A1 to B4, C1 to C6, D1 to D4 , E1, E2, F1, F2, G1 to G4 ஆகியவைகளில் விசத்தன்மை இல்லை. ஆனால் அவை எரிசாராயம் ஆகும். போலீசார் என்னிடம் ஒப்படைத்த பாட்டில்கள் அரசு மதுப்பானக்கடையில் பயன்படுத்தபடும் பாட்டில்கள் என்றால் அது பற்றி தெரியாது. ஏற்கனவே எரிசாராயம் உபயோகப்படுத்தப்பட்ட பாட்டில்களில் சிறிதளவு தண்ணீர் கலக்கினால் அதன் தன்மை சிறிதளவு குறையும். விசத்தன்மை இல்லாத எரிசாராயத்தை குடித்தால் உயிருக்கு ஆபத்து ஏற்படாது என்றால் சரிதான்.

குறுக்குவிசாரணை 5 மற்றும் 10 வது எதிரி தரப்பில்

மேற்கண்ட குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி
தாராபுரம்.